Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 294/2023** |
| Deposition of witness for | :: | **PW.6** |
| Name | :: | **தமிழ்மோகன் (சிறப்பு சார்பு ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 10.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பரளச்சி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் தற்போது பணி மாறுதலில் சென்றுவிட்டபடியாலும் நீதிமன்ற கால விரயத்தினை கருத்தில் கொண்டு மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 26.06.2023 ம் தேதி அதிகாலை 03.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் பரளச்சி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா ராணிசேதுபுரத்தை சேர்ந்த கண்ணன் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 62/2023 சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். ( **புகார் மனு அசாஆ.9 ஆகவும், முதல்**

**தகவல் அறிக்கை அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு 26.06.2023ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான இராணிசேதுபுரத்தில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே சென்று சாட்சிகள் லட்சுமணபெருமாள், ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகஜர் அசாஆ .11 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**4**. பின்னர் அன்றையதினமே புகார்தாரர் கண்ணன் சாட்சிகள் முத்துலெட்சுமி, நந்தகுமார், சரவணக்குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான லட்சுமணபெருமாள், ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் சாட்சிகள் கார்த்திக், காசிராஜ் ஆகியோர்களுடன் காணாமல் போன டிரைலர் மற்றும் எதிரிகளை தேடி சென்றபோது வடக்குநத்தம்– மேலையூர் சாலையில் இராணிசேதுபுரம் விலக்கு கஞ்சம்பட்டி – சின்னையாபுரம் செல்லும் ஓடையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்தவர்களை விசாரிக்க அவர்களது பெயர் மணிகண்டன், முத்துக்கண்ணன் என்று கூறியவர்கள் அதிகாலை 05.30 மணிக்கு இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டதால் எதிரிகளை கைது செய்தும் 05.45 மணிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கார்த்திக், காசிராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து எதிரி மணிகண்டன் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்று காலை 07.30 மணிக்கு இவ்வழக்கில் திருடுபோன TN 67 B 6108 என்ற

எண்ணுள்ள டிரைலர் மற்றும் பதிவு எண் எழுதப்படாத ஊதா மற்றும் வெள்ளை கலர் கொண்ட டிராக்டரை மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அத்தாட்சி அசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் காலை 09.00 மணிக்கு பரளச்சி காவல் நிலையம் வந்து எதிரிகளை நிலைய பாரா வசம் ஒப்படைத்து தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார்.

8. பின்னர் 28.06.2023 ம் தேதி சாட்சிகள் சங்கரபாண்டி, வேலுச்சாமி, சரத்குமார், ராம்குமார், சுப்புராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

9. பின்னர் 27.07.2023 ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களான TN 67 B 6108 என்ற எண்ணுள்ள டிரைலர் மற்றும் பதிவு எண் எழுதப்படாத ஊதா மற்றும் வெள்ளை கலர் கொண்ட டிராக்டர் ஆகியவற்றை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர். எண். 133/2023 பெற்றுள்ளார். **(படிவம் 91 அசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

10. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் கண்ணன் மற்றும் சாட்சி முத்துலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

11. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் நீதிமன்ற விசாரணையின்போது போலீசார் தங்கள் முன்னிலையில் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை எந்த பொருளும் கைப்பற்றவில்லை

என்று சாட்சியம் அளித்துள்ளதில் இருந்தே சொன்ன நாள் சொன்ன முறையில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து அத்தாட்சியில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**